# வேலணை மத்திய கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் - கனடா
## VELANAI CENTRAL COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION - CANADA
**(A Registered Non-Profit Organization)**

4 Maple Beach Cres., Brampton, ON, L7A 2T9, Canada | **Tel:** 416-949-7795 / 416-661-3494 | **Fax:** 905-970-0450

**President**
S. Elancheliyan

**Vice President**
K. Kalyanasundaran

**Secretary**
S. Sivakumar

**Assistant Secretary**
S. Meakavarnan

**Treasurer**
S. Sritharan

**Auditor**
R. Balachandran

**Committee Members**
P. Balasundaram
Pirabu Ponnampalam
K. S. Kathirgamanathan
S. Mahapooranan
Lokan Sundaram
Pon Panchalingam
K. Baskaran
R. Ruthirakanthan
R. Thiruvarooran
T. Eilamurugan

**Patrons**
S. Sivaloganathan
A. Ariyaratnam
A. Senthilvadivel
A. Balendran
K. Gnanachchemmal

பேரன்புடையீர்,

எமது சங்கத்தின் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்கள் அமரர்கள் திரு நாகையா கந்தவேள் மற்றும் திரு தர்மலிங்கம் கந்தையா ஆகியோரது ஞாபகார்த்த மைதானத்தில் நடாத்தப்படும் எமது 20வது ஒன்றுகூடல் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்து பெருமை சேர்க்கும் கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் பிரதி அதிபருமான திரு பொன் ஈசன் அவர்களையும் சிறப்பு அதிதியாகக் கலந்து சிறப்பிக்கும் முன்னாள் ஆசிரியை திருமதி Terese Alexander அவர்களையும் பிரதம மத்தியஸ்தரும் கௌரவ விருந்தினருமான முன்னாள் விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு பே. பொன்னுச்சாமி அவர்களையும் எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் ஏனைய பழைய மாணவர்கள் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களையும் சங்கத்தின் சார்பில் வருக வருகவென இன்முகங் கொண்டு வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தீவகத்தின் முதன்மை கல்வி நிறுவனமாகத் தோன்றிய வேலணை மத்திய கல்லூரியைக் காக்கவும் வளர்க்கவும் போற்றவும் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட அமைப்பே வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கமாகும். இன்று இச்சங்கம் தனது இருபதாவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் வகையில் வளர்ந்து உயர்ந்து நிற்பது கனடா வாழ் பழைய மாணவர்களாகிய எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் தரக்கூடிய விடயமாகும்.

**சிங்கத்திற் சீர்த்தது வல் நாரசிங்கம் திகழ்மதமா**
**தங்கத்திற் சீர்த்தது ஐராவதமா தங்கம் விண்சேர்**
**சங்கத்திற் சீர்த்தது இராசாளியப் பெயர்ப் பழைய மாணவர்**
**சங்கத்திற் சீர்த்தது வேலணை மத்திய கல்லூரிச் சங்கமே**

என்று மற்றவர்களால் பாராட்டப்பட்டுப் பின்பற்றப்படும் வகையாக எமது சங்கத்தின் செயற்பாடுகளும் அர்த்தமுள்ள நலத்திட்டங்களும் அமைந்துள்ளன என்றால் அது மிகையல்ல. வேலணை மத்திய கல்லூரி நாம் பயின்ற எம்மை வளர்த்த எமக்கு வாழ்வளித்த கல்லூரி. இத்தகு கல்லூரிக்கு இது நாள்வரை நாம் என்ன செய்திருக்கின்றோம்? எம்மால் என்ன செய்ய இயலும்? என எண்ணிப் பார்த்தோம். கல்லூரிக்கு உதவுவதைவிட கல்லூரியின் புகழினைப் பறைசாற்றுவதைவிட வேறு என்ன எம்மால் செய்ய முடியும்? அந்த உன்னத பணியைப் பல சிரமங்களின் மத்தியிலும் தொடர்ந்துவருகின்ற சங்கத்தின் அனைத்து முயற்சிகளுக்கும் உறு துணையாக இருக்கும் அனைவருக்கும் எமது மனதார்ந்த நன்றிகள்.

**"உள்ளம் விரிந்தால் உலகமே சொந்தம்"**

நன்றியுடன்

சி. இளஞ்செழியன்
தலைவர்
02-08-2015

**Email:** vccosacanada@gmail.com | **Website:** www.vccosacanada.com

# வேலணை மத்திய கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - கனடா

## செயற்பாட்டு அறிக்கை (Mar 06, 2011 - July 31, 2015)

1) **பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்**: ($ **44, 958.00**)
**2011 யூன்** மாதம் முதல் நடைமுறையில் உள்ள இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது 32 மாணவர்கள் பயன்பெறுகின்றார்கள் (யாழ் பல்கலைகழகம் - **21,** மாணவர்கள், கிழக்குப் பல்கலைகழகம் - **09** மாணவர்கள், கொழும்புப் பல்கலைக்கழகம் - 1 மாணவர், பேராதனைப் பல்கலைக்கழகம் - 1 மாணவர்). மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு தலா **3,000.00** ரூபா வீதம் மாதாமாதம் **96, 000.00** ரூபா நிதியுதவியை தற்பொழுது வழங்கி வருகின்றோம்.

2) **கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம்**: ($ **4, 135.00**)
இத்திட்டத்தின் மூலம் மிகவும் பின்தங்கிய நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் **5** க.பொ.த உயர்தர வகுப்பு **விஞ்ஞானப்பிரிவு** மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்று ரியூசன் கற்றலுக்கான வசதியைப் பெற்றுள்ளார்கள். மாணவர் ஒருவருக்கு மாதம் **2,000.00** ரூபா வீதம் மாதாமாதம் **10, 000.00** ரூபா நிதியுதவியை தற்போது வழங்கி வருகின்றோம். இத்திட்டம் **2012 ஒக்ரோபர்** மாதம் முதல் நடைமுறையில் உள்ளது.

3) **6,7, 8, 9, 10, 11ம் வகுப்பு மாணவர்களுக்கான பரிகார கற்பித்தல் செயற்திட்டம்**: ($ **5, 997.00**)
எமது கல்லூரியில் தற்போதுள்ள மாணவர் எண்ணிக்கையில் 45 வீதமான மாணவர்கள் அடிப்படை எண்ணறிவு மற்றும் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கின்றார்கள். இவர்களுக்கான விசேட பரிகார கற்பித்தல் செயற்திட்டத்திற்கு மாதம் ஒன்றிற்கு சராசரியாக **35, 000.00** ரூபாக்கள் வீதம் வழங்கிவருகின்றோம். இத்திட்டம் **2013 ஏப்ரல்** மாதம் முதல் நடைமுறையில் உள்ளது.

4) கல்லூரியில் அதிபர் அலுவலகத்திலிருந்த Photo Copier & Printer ஆகியன திருத்த முடியாத நிலைக்குப் பழுதடைந்தமையால் அவற்றைப்புதிதாக 192000.00 ரூபாக்களுக்கு ($ **1, 778.00)** 21-07-2015 அன்று திரு ச. அமிர்தலிங்கம் மூலம் வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளோம்.

5) கிழக்குப் பல்கலைக்கழக மாணவி செல்வி பொன்னம்பலம் புஸ்பமாலினி இந்தியா (பெங்களுர்) சென்று கூடைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்ற ரூபா 25000.00 (**$ 232.00**) வழங்கியுள்ளோம்.

**கடந்த நான்கரை ஆண்டுகளில் மொத்தம் 58, 638.00 டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவித் திட்டம்: | $ **44, 958.00** |
| உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான உதவித் திட்டம்: | $ **4, 135.00** |
| 6 - 11ம் வகுப்பு மாணவர்களுக்கான பரிகார கற்பித்தல் செயற்திட்டம்: | $ **5, 997.00** |
| கல்லூரிக்கு Photo Copier & Printer அன்பளிப்புக்கான செலவு: | $ **1, 778.00** |
| பல்கலைக்கழக மாணவர் கூடைப்பந்தாட்ட நிதியுதவி | $ **232.00** |
| 2012ம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டிக்கான நிதியுதவி: | $ **317.00** |
| 2011ம் ஆண்டு அலுமாரிகள் வாங்குவதற்கான நிதியுதவி: | $ **1, 221.00** |

நிறைவாக, எமது தலைவரின் மிகச்சிறந்த அனுபவமும் அர்ப்பணிப்பும் மிக்க வழிநடத்துதலில் சங்க நிர்வாகம் சிறப்பாகச் செயற்படக் காரணமான நல்லுள்ளங்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் எமது உளமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

***அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்***

சு. சிவகுமார் (செயலாளர்)                ச. சிறீதரன் (பொருளாளர்)

பொ.புஸ்பமாலினி ,
சு.வி.அ.க. நிறுவகம்,
கிழக்கு பல்கலைக்கழகம்,
கல்லடி, மட்டக்களப்பு.
17.06.2015.

s.இளஞ்ழெியன்.
வேலணை மத்தியகல்லூரி,
பழைய மாணவர்கள் சங்கம்,
கனடா.

நிதி உதவிக்கான நன்றி கூறல்

கனம்

மேற்படி வேலணை மத்திய கல்லூரியில் கல்வி பயின்று, சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் இசைத்துறையில் 4ம் வருடத்தில் கல்வியைத் தொடர்ந்து வரும் பொன்னம்பலம் புஸ்பமாலினி ஆகிய நான் சென்ற நான்காம் மாதம் எமது பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணி பெங்கலூரில் நடைப்பெற்ற கூடைப்பந்தாட்போட்டியில் கலந்து கொண்டது. தங்களுக்கு தெரிந்ததே.

இதற்காக எமது பல்கலைக்கழக அணி இந்தியா செல்வதற்கு ஆயத்தமாகும் போது என்னால் பயண நிதியை ஈடுசெய்ய முடியவில்லை. இதன் காரணமாக எனக்கு பல வழிகளில் உதவி புரிந்து வரும் கனடா பழைய மாணவர் சங்கத்தினரிடம் நான் இந்தியா செல்வதற்காக நிதி உதவி பெற முடியுமா? என s.இளஞ்செழியன் அவர்களிடம் தொலை பேசியில் தாழ்மையுடன் கேட்டிருந்தேன். அதற்கு அவர், இது சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டு முடிவினை சொல்வதாக கூறியிருந்தார். அது போல் கலந்துரையாடல் வெகு விரைவாக மேற்கொண்டு என்னிலை அறிந்து எனது நிதி உதவியின் ஒரு பகுதியான ருபா 25000.00 பணத்திற்கு தாங்கள் பொருப்பேற்பதாக கூறி, எனது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தனர். இதனைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

இதற்காக எனது தேவையை கருத்தில் கெண்டு குறிப்பிட்ட காலத்தில் உடனடியாக எனக்கு பணம் கிடைப்பதற்கு பல வழிகளில் முன்னின்று உதவி புரிந்த இளஞ்செழியன் அவர்கட்கும், சு. சிவகுமார் அவர்கட்கும், நான் நன்றி கூற கடமைப்பட்டடுள்ளேன். அத்துடன் பழைய மாணவர் சங்கத்தினருக்கும், வேலணை மத்திய கல்லூரிக்கும் நான் மிகவும் நன்றி கூறிக்கொள்கிறேன். அத்துடன் நின்று விடாது நான் எதிர்காலத்தில் எனது பாடசாலைக்கும் எனது சமூகத்திற்கும் என்னாலான உதவியினைப் புரிவேன் என்று கூறி மேலும் மேலும் எனது கல்வி செலவிற்காக ஒவ்வொரு மாதமும் உதவித் தொகையை வழங்கி வரும் கனடா பழைய மாணவர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவருக்கும் வயதில் சிறியவளாகிய, என்னுடைய நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதோடு இவ்வாறாக தங்களது சேவைகள் மென்மேலும் தொடர வேண்டும் என்றும் என்னைப் போன்ற மாணவர்கட்கு தங்களது உதவிகள் தடையின்றி கிடைக்க வேண்டும் என்றும், அதற்காக கனடா பழைய மாணவர் சங்கம் ஒரு ஆல விருட்சமாக வளர வேண்டும். என்றும் எல்லாம் வல்ல இறைவன் ஆசிகளை வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

நன்றி.

இங்ஙனம்
P. Puspamaly.
சு.வி.அ.க. நிறுவகம்,
கிழக்கு பல்கலைக்கழகம்,
கல்லடி, மட்டக்களப்பு.
17.06.2015.

யா/வேலணை மத்திய கல்லூரி
**J/VELANAI CENTRAL COLLEGE**
යා/වේලනයි මධ්‍ය මහා විද්‍යාලය
T.Phone:0213214169 1AB Super School School ID : 1014019

2015.06.19

கௌரவ தலைவர்,
மற்றும் மதிப்பார்ந்த உறுப்பினர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
வேலணை மத்திய கல்லூரி
கனடா,
அனைவருக்கும்,
வணக்கம்,

## Photo Copy and Printer

எமது கல்லூரித்தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த நிழற்பிரதி இயந்திரமும் அச்சுயந்திரமும் (Photo Copy and Printer) பழுதடைந்து விட்டன.

எமது கல்லூரியில் மாணவர்களுக்கான கற்றல் சாதனங்கள் நிழற்பிரதி எடுத்தல், மாணவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கல், மாணவர்களுக்கான தேவைகளை நிறைவு செய்வதற்கான கடிதப்போக்குவரத்துக்கள், அலுவலககடிதங்கள் எனப்பல இன்னோரென்ன தேவைகளுக்கு பயன்படுத்திவந்த நிழற்பிரதியந்திரமும் அச்சுயந்திரமும் பழுதடைந்து விட்டதனால் தற்போது நிழற்பிரதி எடுப்பதற்கும் கடிதங்கள் அடிப்பதற்கும் வெளிக்கடைகளில் அலைந்து திரிந்து இவற்றை நிறைவு செய்வதற்கு மிகவும் இடர்ப்படுகின்றோம்.

நிழற்பிரதியந்திரத்தையும் அச்சுயந்திரத்தையும் பெறுவதற்கு இங்குள்ள அரசியல்வாதிகளிடம் அணுகியிருந்தோம் சாதகமான பதில் கிடைக்கவில்லை. கல்வித்திணைக்களத்திடம் நாடியிருந்தோம் அவர்கள் இதனை தாங்கள் வழங்குவதில்லை, நீங்கள் அரசியல்வாதிகளிடமும் பழைய மாணவர்களிடமும் இதனை கேட்டுப்பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

நாங்கள் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரிடம் கேட்டோம் அவர்கள் புதிய தலைமை வந்தவுடன் எமது கோரிக்கைகளை புறந்தள்ளி கருத்து தெரிவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

எமக்கு மிகவும் பக்கபலமாக உள்ளதும் தற்போதைய கல்லூரியின் வளர்ச்சிக்கு நல்லாசிகளும் மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக கரிசனையுடன் செயற்படுவதுமான தங்கள் பழைய மாணவர் சங்கத்தினரிடம் இவ்வசியமானதும் அவசரமானதுமான தேவையினை நிறைவுசெய்து தருமாறு நம்பிக்கையுடன் வேண்டி நிற்கின்றோம்.

S. Kirup.

முதல்வர்
வேலணை மத்திய கல்லூரி

Sivasamy Kirupaharan
Principal
J/Velanai Central College

metropolitan

Metropolitan Office(Pvt)Ltd,
No,186/22 Kurunatha Suwami lane,
Off point Pedro Road,Jaffna.

No:-J/**00652**

# INVOICE

Date 21-07-2015

***The Precedent, VCC OSA Canada.***

Your order Ref ..................................................Our delivery Memo Ref:..........................................

| S.B.F | Entry No | Quantity | DESCRIPTION | RATE Rs. Cts. | AMOUNT Rs. | Cts. |
|---|---|---|---|---|---|---|
| | | 01 | Canon IR 2520 Photocopier | 170,000.00 | 170,000 | 00 |
| | | 01 | Toner<br>Ser No RMM05043 | | 00 | |
| | | 01 | Canon LBP6230dn | | 22,000 | 00 |
| | | 01 | Stand | | 00 | |
| | | | Ser No:-NCBA102179 | | | |
| | | | Warranty One Year | | | |
| | | | | **Total** | 192,000 | 00 |

E&O.E

**METROPOLITAN OFFICE (PVT)LTD**

Manager

Metropolitan Office (Pvt) Ltd. 186/22 Off Point Pedro Road, Jaffna 021 222 0777 jaffna@metropolitan.lk

# யா/வேலணை மத்திய கல்லூரி
# J/VELANAI CENTRAL COLLEGE

1AB Super School

ID No: 1014019 | Census : 09029 | T.P: 021 321 4169

2015.07.21

கௌரவ தலைவர்,
மற்றும் கௌரவ உறுப்பினர்கள்
பழைய மாணவர் சங்கம்
வேலணை மத்திய கல்லூரி
கனடா,
அனைவருக்கும்,

வணக்கம்,

**போட்டோ கொப்பி இயந்திரம் அன்பளிப்பு உளம் நெகிழ்ந்த நன்றிகள்**

எமது கல்லூாயீல் பாவனையிலிருந்த போட்டோ கொப்பி இயந்திரம் பழுதடைந்த நிலையில் எமது பாவனைக்கு தேவையான போட்டோ கொப்பி இயந்திரத்தினைப் பெறுவதற்கு நாம் பல்வேறு அமைப்புக்களை அணுகியபோதும் அதனால் வெற்றி கிட்டவில்லை.

ஆயினும் தங்கள் அமைப்பினை அணுகியதும் சாதகமான பதில் கிடைத்து உடனடியாகவே ரூபா 192 000 பெறுமதியான போட்டோ கொப்பியந்திரத்தினை தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திரு.ச.அமிர்தலிங்கம் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக எமது உளம் நெகிழ்ந்த நன்றிகளை கல்லூரிச்சமூகம் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தங்களினால் வழங்கப்பட்ட போட்டோ கொப்பி யந்திரம் எமது கல்லூரி பொருட்பதிவேட்டில் 2015.07.21 ஆந் திகதி புத்தகம் 3 இல் 31 பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

S. Kirupa.

Sivasamy Kirupaharan
Principal
J/Velanai Central College

# யா/வேலணை மத்திய கல்லூரி
# J/VELANAI CENTRAL COLLEGE

1AB Super School

ID No: 1014019 Census : 09029 T.P: 021 321 4169


2015.06.19

கௌரவ தலைவர்,

பழைய மாணவர் சங்கம்,

வேலணை மத்திய கல்லூரி

கனடா,

அவர்களுக்கு

வணக்கம்,

## பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தினரால் 2005/2006 காலப்பகுதியில் விளையாட்டு மைதானத்திற்காக பணம் வழங்கப்பட்ட காணிஉறுதி முடித்தல்

பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தினர் தற்போது கனடாவில் வாழும் கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி என்பவரிடம் 2005.10.02 இல் அப்போதைய அதிபர் மூலம் 20 பரப்புக்காணி வாங்குவதற்கு பணம் வழங்கியிருந்ததாகவும், அவ்வாறே திரு.தம்பிராசா திருநாவுக்கரசு என்பவரிடமும் 2006.05.10 இல் 12பரப்புக் காணிக்கான பணம் வழங்கியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். **ஆயினும் கல்லூரியில் இது தொடர்பான எந்தவொரு ஆவணங்களும் கிடையாது.**

எனவே கல்லூரியின் நலன்கருதி பழைய விடயங்களில் சரிபிழை ஆராயாது நாம் காணி உரிமையாளர்களை அணுகி காணியினை கல்லூரிக்கு உறுதிமுடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்புள்ளது.

எனவே தாங்கள் அங்கு வதியும் காணி உரிமையாளர்களான திரு.கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி அவர்களையும் திரு.தம்பிராசா திருநாவுக்கரசு அவர்களையும் தொடர்புகொண்டு காணி உறுதிகளுக்கான (power of Attorney) சட்டவலுவினை இலங்கையிலுள்ள அவர்களுக்கு தெரிந்தவர்களிடம் வழங்கி காணி உறுதியினை கல்லூரியின் பெயரில் எழுதவதற்கு தங்களின் மேலான நேரத்தினையும் செல்வாக்கினையும் பயன்படுத்தி இப்பொரும் கைங்கரியத்தினை நிறைவேற்றித்தருமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(தகவலுக்கானகுறிப்பு: இதே காலப்பகுதியில் திரு. பொன்னப்பா பரராஜசிங்கம் அவர்கள் கல்லூரியின் பின்புற அமைந்த 32 பரப்புக்காணி கல்லூரிக்காக திரு.சுந்தரம் மன்றுளாடி அவர்களிடம் பணம் வழங்கி கொள்வனவு செய்த காணி தற்போது புதிதாக கல்லூரிக்கு உறுதிமுடிக்கப்பட்டது.)

S. Kirupa,

Sivasamy Kirupaharan
Principal
J/Velanai Central College

# ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE CENTRAL DE VELANAI (ASSECVEL)

**வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்**


பாரிஸ். 25/06/2015

தலைவர்
வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
கனடா.
அன்புடையீர்,

பிரான்ஸ் வேலணை ம.கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால்
2005/2006 கா லப்பகுதியில் விளையாட்டு மைதானத்திற்காக
<u>பணம் வழங்கப்பட்ட காணிகளின் உறுதி முடித்தல்.</u>

மேற்குறிப்பட்ட விடயம் சம்பந்தமாக, கல்லூரி அதிபரினால் 19 06 2015 அன்று தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக தங்களின் மேலான கவனத்தைக் கோருகின்றேன்.

கல்லூரியின் விளையாட்டு மைதான விரிவாக்கலுக்காக, கனடாவில் வதியும் திரு.கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி ( 20 பரப்புக் காணிக்கும்) ,திரு. தம்பிராசா திருநாவுக்கரசு (12 பரப்பு காணிக்கும்) ஆகியோருடைய காணிகளுக்கான விலைக் கொடுப்பனவுகள் 2005ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு, அவற்றுக்குரிய உறுதிப் பதிவுகள் முடிப்பதற்குரிய நடவடிக்கைகள் அன்றைய அதிபர் மூலம் மேற்கொள்ளப் பட்டிருந்தன. துரதிருஷ்டவசமாக, நாட்டில் அன்றைய காலப்பகுதியில் இடம்பெற்றுக் கொண்டிருந்த யுத்த சூழ்நிலையால், அவ்வாவணங்களுக்கு என்ன நேர்ந்ததென்பதனைக் கண்டறிய முடியாதுள்ளது. அச்சட்ட ஆவணங்களின்றி மைதான விரிவாக்கல் வேலைகளை முன்னெடுப்பதில் பின்னடைவினை எதிர் கொள்ளும் சூழல் காணப்படுகின்றது.

இக்காணிகளின் முன்னைய உரித்தாளர்கள் கனடாவிலேயே வதிவதால், அவர்களுடன் தொடர்பு கொண்டு, இக்காணிகளை கல்லூரியின் பெயருக்கு மாற்றுவதற்கு வேண்டிய சட்டவலு ஆவணங்களை ( power of attorney) அவர்களின் தேர்வுக்குரியவர்களின் பெயர்களில் பெற்றுத்தந்து, இவ்வுறுதி முடிப்பிற்கு உதவுமாறு தங்களைத் தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.

வணக்கம்.

நன்றியுடன்
திலக ப.
திருமதி. திலகவதி பரராஜசேகரன்
தலைவர்


**73, Rue Doudeauville - 75018 Paris, France - Tél.: 01 42 51 29 92 - Fax: 01 42 51 35 25**
Association enregistrée sous la Loi 1901 - N° d'ordre: 93 / 0949

எமது கல்லூரியின் பழைய மாணவரும் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியுமான திரு ச. அமிர்தலிங்கம் அவர்கள் எமது சங்கத்தின் சார்பில் Printer மற்றும் Photocopier இயந்திரங்களை அதிபர் திரு சி. கிருபாகரன் அவர்களிடம் வழங்கும் காட்சி.



எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு சி. மோகனச்சந்திரன் அவர்களது ஆலோசனைக்கிணங்க அவரது நண்பரும் பொறியியலாளருமான திரு மயில்வாகனன் சுப்பிரமணியம் அவர்கள் காலஞ்சென்ற அவரது மகள் செல்வி அமிர்தா சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக Mechanical Universe (Vol 1-3) புத்தகங்களையும் அதற்கான DVD களையும் தனது சகோதரி திருமதி சரோஜினிதேவி ரவீந்திரன் அவர்கள் மூலம் அதிபர் திரு சி. கிருபாகரன் அவர்கள் முன்னிலையில் கல்லூரி நிர்வாகத்திடம் வழங்கும் காட்சி.
























MERCURY ACCOUNTING SERVICE

*Personal and Business*

• Income Tax Preparation & Planning • Accounting & Business Registration
• INSURANCE & MORTGAGES

GNANA KANAPATHIPPILLAI
Cell: 416-919-6829
Email: gnana1962@gmail.com

15-1415 Kennedy Rd.,
Scarborough, ON M1P 2L6
Tel: 416-751-6829
Fax: 416-751-1896




